சுருக்கம்

பழங்குடியினர் மேம்பாடு – 2015–2016 விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – நீலகிரி மாவட்டம் – பழங்குடியினர் நல ஆராய்ச்சி மைய இயக்குநர் – ஒரு நாள் பயிற்சி 27.07.2015 Masters training Programme on Sickle Cell Anemia நடத்துதல் – பயிற்சிக்கான செலவினம் ரூ.80,000/– (ரூபாய் எண்பதாயிரம் மட்டும்) ஒப்பளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(பமே1(1) துறை

அரசாணை (ப) எண்.192 நாள் 23.07.2015.

மன்மத வருடம் ஆடி 7
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது:–

1. இயக்குநர், பழங்குடியினர் நல ஆராய்ச்சி மையத்தின் 14.07.2015 நாளிட்ட கடிதம்.
2. இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களின் கடித ந.க.எண். பமே/அ2/1217/2013, நாள் 20.07.2015.

********

ஆணை

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரது கடிதத்தில், ஜபல்பூர் தேசிய பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தால் உதகமண்டலம் பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் பழங்குடியினர் இன மக்களுக்கான உடல் ஆரோக்கியம் குறித்தான பயிற்சி முகாம் 27.07.2015 அன்று நடைபெறவுள்ளதாகவும், இப்பயிற்சியில் பழங்குடியின மக்கள் அதிகமாக வாழும் 16 மாவட்டங்களில் பணிபுரியும் மருத்துவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கவுள்ளதால் பயிற்சி நடத்திட தேவையான உபகரணங்கள் மற்றும் வேதிபொருட்கள் வாங்குவதற்காக ரூ.80,000/– (ரூபாய் எண்பதாயிரம் மட்டும்) செலவினம் ஏற்படும் எனவும், இத்தொகையினை அனுமதிக்குமாறு இயக்குநர், பழங்குடியினர் நல ஆராய்ச்சி மையம் அவர்களின் 14.07.2015 நாளிட்ட இணை அஞ்சல் மூலம் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் இத்தொகையினை 2015–2016–ம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்குமாறும் இயக்குநர் ஆதி திராவிடர் நலம் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே பத்தி 1–ல் உள்ள இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களின் கருத்துருவினை நன்கு ஆய்வு செய்தது. 27.07.2015 அன்று நீலகிரி மாவட்டம், ஊட்டியில் இயங்கிவரும் பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில், ஜபல்பூர் பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தால் நடத்தப்பட உள்ள பழங்குடியின மக்களுக்கான உடல் ஆரோக்கியம் குறித்த பயிற்சி முகாம், பழங்குடியின மக்கள் அதிகம் வாழும் இவ்வரசாணையின் இணைப்பு I–ல் குறிப்பிட்டுள்ள 16 மாவட்டங்களிலிருந்து மாவட்டத்திற்கு 2 மருத்துவ அதிகாரிகள் வீதம் கலந்துக்கொள்ள ஒரு நாள் பயிற்சிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் வேதிப்பொருட்கள் போன்றவைகள் இணைப்பு – II–இல் குறிப்பிட்டவாறு உள்ள செலவினத்திற்கு ரூ.80,000/– (ரூபாய் எண்பதாயிரம்

மட்டும்) 2015–16–ம் ஆண்டிற்கான விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவின தொகையை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைத்து செலவினம் மேற்கொள்ளப்படும்:

"2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 – பழங்குடியினர் நலன் – 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – 12 ம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II – மாநிலத் திட்டம் – JY விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 09 உதவித்தொகை – 01 – நடப்புச் செலவுக்கான உதவித்தொகை (த.தொ.கு 2225 – 02 – 796 – JY 0912)"

4. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் நடப்பாண்டு வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டிலிருந்து மேற்கொள்ளப்படும். இத்தொகையினை இயக்குநர், பழங்குடியினர் நலம் பெற்று இயக்குநர், பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் அவர்கள் செலவினம் மேற்கொள்ள வழங்க அனுமதியளிக்கப்படுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண். 4175/ஆதி(ம)பந/2015, நாள் 23.07.2015 –ல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

ப. அண்ணாமலை,
அரசு செயலாளர்.

பெறுநர்

இயக்குநர்,பழங்குடியினர் நலத்துறை, சென்னை –5.
இயக்குநர், பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்,
மு.பாலாடா, உதகை –4.
மாநிலக்கணக்காய்வுத் தலைவர் சென்னை–18/6/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 8.

நகல்:-

நிதி (ஆதி(ம) ப.ந. /வரவு செலவு பொது–I / பொது-II) துறை
சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5, பமே2) துறை,
சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலர்
அவர்களின் தனிச் செயலர்,
சென்னை–9

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

23.7.15

பிரிவு அலுவலர்.

Annexure - I

G.O (D) No. 192, Adi Dravidar and Tribal Welfare (TD1(1) Department, Dated 23.07.2015

1. Salem
2. Thiruvannamalai
3. Villupuram
4. Vellore
5. Dharmapuri
6. Namakkal
7. Thiruvallur
8. Kancheepuram
9. The Nilgiris
10. Coimbatore
11. Krishnagiri
12. Erode
13. Tiruchirapalli
14. Cuddalore
15. Madurai
16. Ariyalur

P. Annamalai,
Secretary to Government

//FORWARDED BY ORDER//

SECTION OFFICER

## Annexure - II

**G.O (D) No. 192, Adi Dravidar and Tribal Welfare (TD1(1) Department, Dated 23.07.2015**

Proposed expenditure for the Master Training on Sickle Cell Anaemia to the health officials of Government of Tamil Nadu on 27.07.2015.

**Expected Participants:**

Health department 2 officials from 16 districts in Tamil Nadu, Participants from ICMR, Jabalpur, TRI-Tamil Nadu officials, and Tribal Welfare Department-Tamil Nadu officials and local health officials.

Total No. of Participants = 50 members

| | | |
|---|---|---|
| 1. | Zip File (300x50) | Rs.15,000.00 |
| 2. | Name Pouch and Tag (20x50) | Rs1,000.00 |
| 3. | Scribbling Pad (30x50) | Rs.1,500.00 |
| 4. | Pen (20x50) | Rs.1,000.00 |
| 5. | Printing in Zip File | Rs.1,000.00 |
| 6. | Printing in Name Pouch | Rs.500.00 |
| 7. | Lunch | Rs.12,000.00 |
| 8. | Morning Tea, Snacks | Rs.2,500.00 |
| 9. | Evening Tea, Snacks | Rs.2,500.00 |
| 10. | Audio equipments | Rs. 5,000.00 |
| 11. | Water Bottles | Rs.1,000.00 |
| 12. | Miscellaneious | Rs.14,000.00 |
| 13. | Materials/Chemicals/Reagents/Equipments | Rs.15,000.00 |
| 14. | Banner | Rs.3,000.00 |
| 15. | Photos | Rs.5,000.00 |
| | Total | Rs.80,000.00 |

(Rupees Eighty Thousand only)

P. Annamalai,
Secretary to Government

//FORWARDED BY ORDER//

23.7.15

SECTION OFFICER